தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 2 | தி.பி. 2015 | மேழம் 24 (6-5-84) | 65 காசுகள் | இதழ் எண்: 38 | பகுதி-19-20

பஞ்சாபியர், அசாமியரிடம் கொடுமையான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, இந்தியா செயவர்த்தனாவைத் தட்டிக்கேட்க முடியாது

இலங்கை - அதுலத்முதலியும் இந்தியாவின் பி.சி.சேத்தியும் ஒரே மனப்பான்மையரே!

இந்திய தேசிய பாதுகாப்புச் சட்டம், ஆங்கிலேயரின் ரௌலட் சட்டத்தைவிடக் கொடுமையானதே!

அரசே வன்முறைகளை வளர்க்கிறது!

தேசிய இனங்களின் விடுதலை உணர்வை இந்திய அரசு மதிக்க வேண்டும்!

தமிழீழ விடுதலையை ஆறப் போடுவதன் நோக்கம், அதன் போக்கைத் திசைமாற்றுவதற்கே ஆகும்!

பஞ்சாபில் நிலைமை நாளுக்கு நாள் மிகக் கொடுமையாகி வருகிறது. செய்தித் தாள்களில் வரும் செய்திகளை விட, அரசுச் சார்பிலும் அகாலிகளின் சார்பிலும் வன்முறைகளும் அடக்கு முறைகளும் மிகக் கொடுமையாகவும் கடுமையாகவும் அங்கு நடைபெற்று வருகின்றன. அகாலிகள் தனிநாடு கேட்பதை அரசு மூடிமறைத்து வருகிறது. பஞ்சாபின் சிக்கலைத் தீர்க்க அரசு ஒழுங்கு நிலைகளைக் கையாளும் போக்கையே கடைப்பிடிப்பதாகக் கூறுவது மிகவும் பொய். பஞ்சாபின் போராட்டத்தை அடக்க இந்திய தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவது, ஆங்கிலேயர் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தை அடக்க ரௌலட் சட்டத்தைப் பயன்படுத்தியதை விடக் கொடுமையானது. விடுதலைப் போராட்டங்களின் தொடக்கங்களும் வடிவங்களும் வெவ்வேறு வகையாக இருந்தாலும் நோக்கங்கள் ஒன்றே.

உலகெங்கும் உள்ள நாடுகளில் விடுதலைக் கிளர்ச்சி வளர்ந்தோங்கி வருகின்ற காலம் இது. தேசிய இனங்களின் இடையில் மட்டுமன்று, அடக்கி ஆளப்பெறும் மக்களிடையிலும் கூட உரிமைக் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் ஆளுகின்ற பகுதியினர் அக்கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் ஏதாவது ஒரு காரணம் காட்டி, அடக்கவே செய்கின்றனர்.

இந்தியாவிலும், இலங்கையிலும் மக்களிடையில் நடைபெறும் உரிமைப் போராட்டங்கள் ஒரே வகையைச் சார்ந்தவைதாம்! ஆனால், இங்கு நடைபெறும் அசாமியர், பஞ்சாபியர், மிசோக்கள், நாகாலாந்தியர் (நாகர்கள்) முதலியவரின் போராட்டங்களை இந்திய அரசு வேறு வேறு வடிவங்களில் மக்களுக்குக் காட்டுகின்றன. எனினும் அவையும் விடுதலைப் போராட்டங்களே!

தேசிய இனப் போராட்டங்கள் இனப் போராட்டங்கள் என்றோ, மதப் போராட்டங்கள் என்றோ, அவ்வினங்களில் உள்ள சிறுபான்மையரின் - குமுகாயப் பகையாற்றல்களின் - (சமூக விரோத சக்திகளின்) வன்முறைகள் என்றோ ஆளும் பகுதியினர் கொச்சையும் இழிவும் படுத்தி வருகிறார்கள். இந்நிலை அவர்களுக்கே நல்ல முடிவுகளைத் தராது. இது மக்களின் உரிமைகளை ஒடுக்குகின்ற பழைய கையாளுமையே!

இந்தியாவைப் பொறுத்த வரையில், இஃது ஓர் ஓரினத் தேசமே அன்று. அல்லது தம்முள் ஒன்றிப் போகும் தேசிய இனங்களைக் கொண்ட நாடும் அன்று. முற்றிலும் வேறுபட்ட மொழிகள், இனங்கள், பண்பாடுகளைக் கொண்ட, என்றுமே ஒன்றிப் போக இயலாத மக்களைக் கொண்ட நாடாகும், இந்தியா! மேலும் அவ்வினங்கள் ஒற்றுமைப்பட்டு ஒன்றிப் போகும் நிலையில், ஆளும் கூட்டத்தினர் என்றைக்குமே நிலைகளைச் சரிப்படுத்தி விட முடியாது. வெறும் ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று வாய்ப்பந்தல் போட்டு, 'எங்களுக்குள் வேறுபாடுகளே இல்லை' என்று வெளி நாட்டினரை ஏமாற்றலாமே தவிர, இங்குள்ள தேசிய இன மக்களை ஏமாற்றி விட முடியாது. புதிய கருவிகள் பழைய போக்குகள் என்னும் நிலையில் இங்குள்ள மக்களை என்றென்றுமே அடிமைப் படுத்தி அடக்கி ஒடுக்கி ஆண்டு விட முடியும் என்றும் நினைத்து விட முடியாது.

எனவே, இங்குள்ள தேசிய இனப் போராட்டங்களைப் புறக்கணிப்பது போலவே, தமிழீழப் போராட்டத்தையும் நினைத்து அதனை ஆறப்போடும் முயற்சி தவறானது என்று எச்சரிக்க விரும்புகிறோம். தமிழீழ விடுதலையை ஆறப் போடுவதன் நோக்கம், அதைத் திசை திருப்புவதற்கே ஆகும் என்பதும் நாங்கள் அறியாத ஒன்றன்று. அனைத்துக்கும் காலம் ஒரு முடிவைக் கற்பிக்கத்தான் போகிறது என்பதை மட்டும் இப்பொழுதைக்கு இங்கே சொல்லி வைக்கிறோம்.

— பெருஞ்சித்திரன்

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம்; உ. த. மு. க.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

உ.த.மு.க. கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத்தொடர்

இடம் : அணைப்பட்டி (நிலக்கோட்டை வட்டம், மதுரை மாவட்டம்)

நாள் : தி.பி. 2015, விடை 8, (21-5-1984) முதல் தி.பி. 2015 விடை 17 (30-5-1984) வரை

கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்!

1. வரும் தி.பி. 2015 விடை 8(21-5-1984) முதல் விடை 17 (30-5-84) முடிய உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தன் தொண்டர்களுக்கென முதல் பயிற்சி வகுப்பை, மதுரை மாவட்டம் நிலக்கோட்டைவட்டம், அணைப்பட்டி என்னும் ஊரில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

2. மேற்கூறப்பெற்ற 10 நாள்களிலும், சிறந்த தலைப்புகளில் 30 பயிற்சி வகுப்புகளும், கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் 3 சிறப்புரைகளும், 5 கலந்துரையாடல்களும், 2 இசை நிகழ்ச்சிகளும் 1 நாடகமும், பின்காணும் அட்டவணைப்படி நடைபெறும்.

3. பயிற்சி நடைபெறும் ஊரும் இடமும் மிகச்சிறந்த இயற்கைச் சூழலிலும் வையை ஆற்றங்கரையிலும் நடைபெறும். பயிற்சி பெறுவோர்க்கு உணவும் உறையுளும் இலவயம், எனினும் பயிற்சிக்கு ஆகும் செலவுகளை ஈடுகட்ட பயிற்சி பெறவிரும்புவோரிடமிருந்து உருபா 50 மட்டும் பயிற்சிக் கட்டணமாகத் தண்டப் பெறுகிறது. கட்டணம் செலுத்திப்பதிந்து கொள்ளாதவர்கள் வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப் பெறமாட்டார்கள். குறிப்பிட்ட எண்ணிக்கை உடைய பயிற்சியாளர்களே சேர்க்கப் பெறுவதால் பதிவுக்கு முந்துக!

4. வகுப்பில் நடத்தப் பெறும் உரைகளைக் கேட்க விரும்பும் பொதுமக்களும் பார்வையாளர்களும் ஒவ்வொருநாளும் நடைபெறவிருக்கும் அனைத்து வகுப்புகளுக்கும் உரு 2மேனி, பார்வைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இசை நிகழ்ச்சிகளுக்கும், நாடகத்திற்கும் பார்வையாளர்கள் நிகழ்ச்சி ஒன்றுக்குத் தனிக் கட்டணமாக உருபா 2 செலுத்துதல் வேண்டும். பயிற்சிக் கட்டணம்செலுத்திப் பதிந்து கொண்ட மாணவர்களுக்கு எந்தத் தனிக் கட்டணமும் தண்டப்பெறபாட்டாது.

5. பயிற்சிக்கு வர விரும்பும் தொண்டர்கள் அனைத்து முன்னேற்பாடுகளுக்கும் உகத்த வகையில், தம் விருப்பு இசைவையும், கட்டணம் உருபா 50-ஐயும் 15-4-84 குள் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பித் தரல் வேண்டும். அதற்குப் பின் வரும் கட்டணங்களும், விருப்பிசைவும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப் பெறமாட்டா.

6. பத்து அகவைக்கு மேல் 13 அகவைக்குள்ள சிறுவர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்சிக் கட்டணம் உருபா 25-ஆகும். பத்து அகவைக்குக் கீழ் உள்ள சிறுவர்கள் தம் பெற்றோருடன் வரலாம். அவர்களுக்குக் கட்டணம் இல்லை. ஆனால் அவர்களை அழைத்துவரும் பெற்றோர் அல்லது உறவினர் மின் கூட்டியே அதன் விளக்கத்தைத் தலைமைக் கழகப் பொறுப்பாளர்க்குக் கட்டாயம் தெரியப்படுத்துதல் வேண்டும்.

7. விடுபட்ட அல்லது தேவையான பிற விளத்தங்கள் இனி வரும் தமிழ்நிலம் தென்மொழி இதழ்கள் வழியாகத் தெரிவிக்கப் பெறும்.

8. நிலைமைக்கும் தேவைக்கும் தக்கபடி வகுப்புத் தலைப்பும், பயிற்றாசிரியரும் மாற்றம் பெறலாம்.

கழகமுதல்வர் கட்டளைப்படி,
தென்னவன்கோ: க.மு.
துணைப்பொதுச் செயலாளர்.
உ:த.மு.க.

'தலைமையகம்' சென்னை-5.
20-2-84

நாள்	நேரம் மணிமுதல்/மணிவரை	உரைத்தலைப்பு	உரை நிகழ்த்துவோர்
விடை 8, திங்கள் (21-5-84)	காலை 8—9-30	1. தமிழ் இலக்கண அமைப்பு	பேரா. அரங்கச்செல்வன், க.மு., அரசினர் கல்லூரி, கோபி
	10—11 30	2. முதன் மாந்தவியல்	திரு. குழந்தைவேலன், க.மு., கல்வெட்டாய்வாளர்,
	மாலை 3—4-30	3. பாவேந்தரின் பாடல்கள்	புலவர், பொதிகைச் செல்வன்
	6—9-00	கலந்துரையாடல்	
விடை 9, செவ்வாய் (22-5-84)	காலை 8—9-30	4. தமிழ் இலக்கிய அமைப்பு	பேரா. காளிமுத்து, க.மு., கலை, பண்பாட்டுக் கல்லூரி,
	10—11-30	5. பழந்தமிழகம்	பேரா·கோ. தங்கவேலனார். க.மு.
	மாலை 3—4-30	6. பிற்காலத் தமிழகம்	இல. இ. மெய்ப. (வரலாற்றுத் தலைமைப் பேராசிரியர், சென்னை) மாநிலக் கல்லூரி.
	6—9-00	நெல்லை, செல்வத்தாயம்மாள் செந்தமிழ் வில்லிசைக் குழுவினர் வழங்கும், பாவலரேறு அவர்களின் 'ஐயை' வில்லிசை	
விடை 10, அறிவன் (23-5-84)	காலை 8—9-30	7. வரலாற்றிலக்கியம்	புலவர். கடலூர் மணிமாறன்
	10—11-30	8. இனமுன்னேற்ற முன்னறிவோன் திருவள்ளுவப் பேராசான்	திருக்குறள்மணி திரு சி.அரசிறைவன், அறி இ.
	மாலை 3—4.-30	9. தற்காலத் தமிழகம்	தென்னவன்கோ, க.மு.
	6—9-00	கலந்துரையாடல்	
விடை 11, வியாழன் (24-5-84)	காலை 8—9-30	10. சமய இலக்கியம்	புலவர். சிவசங்கு
	10—11-30	11. தமிழினம்-தாழ்ச்சியும்-வீழ்ச்சியும்-மீட்சியும்	திரு இரணியன், க.மு.ப.இ.
	மாலை 3—4-30	12. எதிர்காலத் தமிழகம்-தமிழீழம்	சுழுவேந்தன்
	9—6-00	கலந்துரையாடல்	
விடை 12, வெள்ளி (2'-5-84)	காலை 8—9-30	13. பாவாணர் மொழியியல் முயற்சிகள்	சொல்லாய்வறிஞர் ப. அருளி
	10—11·30	14. பெரியார் இனவியற்கொள்கை	புலவர் குமர, தமிழொளியன்
	மாலை 3—4.30	15. தமிழியப் பொதுவுடைமை	மார்க்சிய அறிஞர், குணா
	6—9-00	கோட்டை இராவணன் வழங்கும் 'விடியலைநோக்கி'-நாடகம்.	
விடை 13, காரி (26-5-84)	காலை 8—9-30	16. எதிர்காலத் தமிழகம்-தனித்தமிழ்நாடு	புலவர் தமிழ்மாறன், க.இ.
	10—11.30	17. பழந்தமிழிசை	பேரா. வீ.ப.கா. சொல்லழகனார்
	மாலை 3—4.30	18. தமிழீழ விடுதலைப் போராட்டம்:	திரு. முகுந்தன், தலைவர் தமிழீழ மக்கள் விடுதலைகழகம்.
	6—9	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் மொழியியற் சிறப்புரை	
விடை 14, ஞாயிறு (27-5-84)	காலை 8—9.30	19. பழந்தமிழ் நாடகப்பாங்கு	பாவலர் தஞ்சைவாணன், க.மு., சென்னை.
	10—11 30	20. தமிழின நாகரிகப் பரவல்	திரு. நா. முத்துக்குமரன், அறி.இ.
	மாலை 3—4.30	21. பழந்தமிழரின்போர்க்கலைகள்	பேரா. செயப்பிரகாசம்.
	6—9.00	கலந்துரையாடல்	
விடை 15, திங்கள் (28-5-84)	காலை 8—9.30	22. மொழியியல் கொள்கை	சொல்லாய்வறிஞர் ப. அருளி
	10—11.30	23. தமிழர் கலைகள்	வணி. இ. க.மு, ச:இ. திரு அறவாழி உடுமலைப்பேட்டை
	மாலை 3—4.30	24. பாவலரேறு அவர்களின் இசைப் பாடல்கள் (விளக்கவுரை)	தென்மொழி நா. இளமாறன்
	6—9.00	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் இனவியற் சிறப்புரை	
விடை 16, செவ்வாய் (29-5-84)	காலை 8—9 00	25. வாழ்வியல்	திரு மா. பூங்குன்றன், க.மு., தமிழ்ப்பல்கலைக் கழகம், சென்னை.
	10—11.30	26. தற்காலக் கலப்படஅரசியல்	தென்மொழி ப. முருகவேள்
	மாலை 3—4·30	27. பாவலரேறு அவர்களின் பாடல்கள் (விளக்கவுரை)	பேரா. அரசேந்திரன், க.மு., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
	6—9.00	கல்லை, அருட்செல்வனின் 'இன்னுமா தூக்கம்?'	வில்லிசை அரங்கேற்றம்
விடை 17, அறிவன் (30-5-84)	காலை 8—9.30	28. இயல்பறிவியல்	பேரா. இல. க. இரத்தினவேல் க.மு.
	10—11.30	29. தமிழர் பண்பாடு	திரு இரா. பாவாணன், அறி.இ.
	மாலை 3—4.30	30. பாவலரேறு அவர்களின் கட்டுரைகள்	தென்னவன்கோ, க.மு.
	5—6.30	ஐயந்தெளிதல் : கலந்துரையாடல்.	
	இரவு 7—10.30	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் நாட்டியற் சிறப்புரையும் நிறைவுரையும்	

வகுப்பு இடைவேளைகளில் பவானியில் நடைபெற்ற பாவலரேறு அவர்களின் பத்துநாள் திருக்குறள்—தொடர் சொற்பொழிவுகளும், உ.த.மு.க. தொடக்க மாநாட்டு இசை நிகழ்ச்சியும், பாவலர் தஞ்சை-வாணன் அவர்களின் "களம் கண்ட பாவலன்" நாடகமும் ஒலிபரப்பப்படும்.

தொகைகள் பணவிடை வழியே அனுப்பவேண்டும். நேரிலும் தரலாம். நன்கொடைகளும் வரவேற்க பெறுகின்றன

தொடர்புக்கும் தொகை விடுப்பதற்கும்:
மா. பொழிலன், 'தமிழ்நிலம்'
சென்னை—600 005.

அன்புடன்,
தென்மொழி நா. இளமாறன்.
பயிற்சி வகுப்பு அமைப்பாளர்.

பயிற்சி வகுப்பு மேற்பார்வை: தென்னவன்கோ: துணைப்பொதுச் செயலர்.

மேனாள் சட்டப்பேரவை உறுப்பினரும் இனஎழுச்சி மறவருமாகிய திரு ஆ. புனியாண்டி. அவர்களின் திருமகனார் திரு. மு. அறிவழகன். க.மு, அவர்கள் பத்துநாளும் உணவு வழங்குவதற்கு அன்புடன் இசைந்துவுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொண்டர்கள் நல்ல வாய்ப்பை நழுவ விடவேண்டாம்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 38 (6-5-84) பகுதி 19-20

கலைஞர் சிந்திக்க வேண்டும்!

அண்மையில் தி.மு.க.விலிருந்த தொழிற்சங்கத் தலைவரும், பொதுவுடைமைப் பற்றாளரும், சிறந்த அரசியல் அறிஞரும் பேச்சாளருமான, திரு. க. சுப்பு அவர்கள், அக்கட்சியிலிருந்து விலகி, ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வில் சேர்ந்துள்ளது, கலைஞரும் அவர் கட்சியாளர்களும் சிந்திக்க வேண்டிய ஒரு செயலாகும்.

இந்நிகழ்ச்சி ஒரு கட்சியின் உள்முகச் செயற்பாடு என்பதும் அதில் தலையிட பிறருக்கு அறமுறை (தார்மிக) உரிமை இல்லையென்பதும், உண்மை என்றாலும், கலைஞர், தமிழர் இனநலத் தொடர்புடையவர் ஆகையாலும், தி.மு.க.வின் அரசியல் தொடர்புடைய செயல்களைப் பற்றி நமக்குக் கவலையோ அக்கறையோ இல்லையென்றாலும், இனநல நிலையில் அதன் செயற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டியவர்களாக நாம் இருப்பதாலும், சுப்புவின் விலகல் குறித்து, நாமும் சில கருத்துகளை அக்கட்சியினர்க்கும் குறிப்பாகக் கலைஞர் அருட்செல்வர் (கருணாநிதி) அவர்களுக்கும், முன்வைக்க வேண்டியிருக்கிறது.

கலைஞர் அரசியல் நிலையில் மிகுந்த பட்டறிவும் சூழ்ச்சித் திறனும் உள்ளவர் என்பது நமக்கு நன்கு தெரியும். ஆனால் அறிஞர்களைப் பேணிக் கொள்ளும் நிலையிலும் அவர் அரசியல் சூழ்ச்சிகளைப் பயன்படுத்தி, அவர்களைப் பழிவாங்குவதும், அவர்களிடம் புறக்கணிப்பாக நடந்து கொள்வதும், அவர்க்கும் அவரின் செயற்பாடுகளுக்கும் நல்லதில்லை. இங்கு நாம் அறிஞர்கள் என்று குறிப்பிடுவது நடுநிலையும், தன்னலமற்ற சிந்தனைத் திறனும், மக்கள் நலத்துக்காகத் தங்களை ஈகம் செய்துகொண்டவர்களை மட்டுமே குறிக்கும். மற்றபடி, தங்கள் அறிவை, ஒரு கட்சிக்கோ அல்லது தலைவர்க்கோ தங்கள் தந்நலத்துக்காக அடகு வைத்துவிடுபவர்களை எவ்வகையானும் குறிக்காது.

திரு. சுப்பு போன்றவர்கள் வெறும் அரசியல் தொண்டர்கள் மட்டுமே அல்லர்: சிறந்த அரசியல், பொருளியல், குமுகாயவியல் அறிஞர்கள் ஆவார்கள். இந்த வகையில் டார்பிடோ சனார்த்தனம் அவர்களையும் குறிக்கலாம். இவர்கள் இருவருமே தமிழ் இனத்துக்காகவும், பெரியார் கொள்கைக்காகவும் தி.மு.க. முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்டவர்கள். இவர்கள் இருவரைப் பற்றியும் நமக்கு நன்கு தெரியும். ஆனால் 'டார்பிடோ சனார்த்தனம் மூன்று நான்காண்டுகளுக்கு முன்பே தி.மு.க.விலிருந்து விலகி அ.தி.மு.க.வில் சேர்ந்துவிட்டார். சுப்பு இப்பொழுதுதான் அதுவும் மிகுந்த பொறுமைக்கும் ஆய்வுக்கும் பின்னர், அ.தி.க.மு.வில் சேர்ந்துள்ளார். (திரு. சுப்பு நம்மைப்பற்றியும் தவறான சில செய்திகளைத் தமிழக, தமிழீழத் தலைவர்கள் சிலரிடம் கூறியுள்ளதாகத் தெரிகிறது. அதுபற்றி நாம் கவலைப்படவில்லை. இருப்பினும்,) இவர்கள் இருவரும் மிகச்சிறந்த அறிஞர்கள்; மிகச் சிறந்த பேச்சாளர்கள். இவர்கள் இருவரையும் கலைஞர் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால், ஏனோ தெரியவில்லை, அவர்களைக் கலைஞர் பயன்படுத்திக் கொள்ளாமல், பழிவாங்கி, அவர்களின் மனம் புண்படும்படி செய்து, கட்சியை விட்டு அவர்கள் வெளியேறுமாறு செய்ததுமல்லாமல், கலைஞர் தமக்கு நேர் எதிரியாகக் கருதிக்கொண்டிருக்கும் ம.கோ.இரா. (எம்.சி.ஆர்) அவர்களிடம் இணையுமாறு செய்து விட்டார். இஃது அரசியல் நிலையில் கலைஞர்க்குப் பெருத்த இழப்பும், ம.கோ.இரா.விற்குப் பெருத்த ஊதியமுமாகும்.

திருவாளர்கள் சுப்புவைப் போலும், 'டார்பிடோ' சனார்த்தனத்தைப் போலும் நேர்மையான, உண்மையான, வலிவான தொண்டர்கள் கிடைப்பது மிகவும் அரிது. இப்பொழுதுங் கூட தி.மு.க.வில் அத்தகைய தொண்டர்கள் இருப்பார்களா என்பது ஐயமே! இந்நிலையில் திரு. சனார்த்தனம் திரு சுப்பு இருவரும் ஏன் தி.மு.க விலிருந்து விலக வேண்டும்? தி.மு.க. அவர்களுக்குப் பிடிக்காமல் இல்லை. கலைஞரையும் அவர்களுக்குப் பிடிக்காமல் இல்லை. இருவரும் கலைஞரிடம் இன்றும் மாறாத அன்பும் மதிப்பும் உடையவர்களே என்பது நமக்குத் தெரியும். பின் ஏன் அவர்கள் விலக வேண்டும்? அதற்குக் கலைஞரின் சூழ்ச்சியான போக்குத்தான் காரணம்.

கலைஞர்க்கு எப்பொழுதுமே தம்மையொத்த, அல்லது தம்மினும் மேம்பட்ட அறிஞர்களைப் பிடிக்காது. அவர்களை அவர் மனம்விட்டுப் பாராட்டியதோ, முன்னேற்றியதோ, அவர்களின் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்ததோ இல்லை. திருவாளர்கள் சனார்த்தனமும், சுப்பும் கலைஞரின் இத்தகாத மனநிலையால் தாக்குண்டவர்கள்; பழிவாங்கப் பட்டவர்கள்; இன்னுஞ் சொன்னால் நசுக்குண்டவர்கள். தம்மேல் அளவிறந்த அன்பு காட்டுபவர்களையும், நம்பிக்கை உள்ளவர்களையும் கூட பழிவாங்குவது, பொது நலத்துக்கு உதவாத கொடுமையான மனநிலையாகும். அண்மையில் கட்சியினின்று விலகிய திரு. சுப்பு அவர்களின் விலகல் அறிக்கை, கலைஞரின் இந்த மனக்கோட்டத்தை மிகுந்த வருத்தத்துடன் சுட்டிக் காட்டுகிறது.

திரு. சுப்பு அவர்கள் தாம் நடத்திய 'நக்கீரன்' என்னும் இதழை எவ்வாறெல்லாம் நடத்த விடாமல் கலைஞர் தடுத்தார் என்பதை அவர் அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார். நாம் நடத்தும் தென்மொழி நிலையிலும் கலைஞர் இதே முறையைத்தான் கையாண்டு, அதனை அழிக்க முற்பட்டார் என்பது இன்றுள்ள பல பேருக்கு, குறிப்பாக இளைஞர்களுக்குத் தெரியாது. அவரின் 'பூம்புகார்' திரைப்படத்துக்கு எழுதிய திறனாய்வில் சுட்டப்பெற்ற ஓரிரு கருத்துகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் திரு. பக்தவத்சலம் காலத்தில் தமிழகத்தில் உள்ள நூலகங்களுக்கெல்லாம் போய்க் கொண்டிருந்த 'தென்மொழி' இதழை உடனே நிறுத்தினார். தென்மொழி பற்றியோ நம்மைப் பற்றியோ ஒரு வரிகூட முரசொலியில் இதுவரை வெளிவராமல் பார்த்துக் கொண்டார்.

தமிழுக்கும், தமிழர்க்கும் தென்மொழி நலஞ்செய்ய வில்லையா? முரசொலியை விட அஃது எந்த வகையில் தன் தொண்டு நிலையில் தாழ்ந்தது? பின் ஏன் கலைஞர் அதை முன்னேறாமல் செய்தார். அவருடைய இவ்வெதிர் நடவடிக்கையால் தென்மொழியின் மொத்த வெளியீட்டுப் படிகளில் ஈராயிரம் படிகள் இரண்டே மாதங்களில் குறைத்து அச்சிட வேண்டி வந்தது. அன்று பின்னுக்கு இழுக்கப்பட்ட தென்மொழி இன்றும் முன்னேற முடியவில்லை. தேவையற்ற எத்தனையோ நிலைகளுக்கெல்லாம் துணையாக நின்று ஆதரவளித்த கலைஞர், அன்றிலிருந்து இன்றுவரை தென்மொழிக்கோ, நமக்கோ, ஓர் எள் மூக்கத்துணையும் துணை நிற்கவில்லை. மாறாகக் கெடுதலே செய்தார். நமக்குத் தனிப்பட்ட முறையில் பல தொல்லைகளையும் கொடுத்தார்; இன்றும் கொடுக்கிறார். இன்னும் கூட அவர் மனநிலையில் மாற்றமேற்படவில்லை; அது தெளிவடையவுமில்லை.

உ.த.மு.க - தொடக்கம் பற்றியும், 'தமிழ் நிலம்' வெளியீடு பற்றியும் பல செய்தித்தாள்களில் செய்தி வந்திருந்தும், முரசொலியில் செய்தி வரவில்லை. 'தமிழ் நிலம்' வெளியீடு பற்றிப் பணம் பெற்று ஏற்றுக் கொள்ளப் பெற்ற விளம்பரச் செய்தியும், முரசொலியில் வெளிடப் பெறாமல், தடுத்து நிறுத்தப் பெற்றுப் பணம் திருப்பப் பெற்றது. இதுபோல் ஏராளமான இடர்ப்பாடுகள் நமக்கும் நம் செயல்களுக்கும் மறைமுகமாகத் தரப்பட்டன. இவற்றைப் பற்றியெல்லாம் நாம் கவலைப் பட்டதுமில்லை. அவைபற்றி இன்று வரை வெளிப்படுத்தியதுமில்லை.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

உ. த. மு க. பயிற்சி வகுப்பு
அணைப்பட்டி
நிலக்கோட்டை(வட்.)மதுரை(மாவட்)

அறிக்கை

1. முன்னிதழ்களில் குறிப்பிட்ட அறிக்கையின்படி திட்டமிட்ட உ.த.மு.க. பயிற்சித்தொடர் வகுப்புகள், முறைப்படி வரும் 21-5-84 முதல் 30-5-84 முடிய, மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், அணைப்பட்டி என்னும் சிற்றூரில் உறுதியாய் நடைபெறும். ஆர்வமுள்ள அன்பர்கள் அனைவரும் கட்டாயம் பங்கு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள்.

2. ஏற்கனவே அறிக்கையில் வெளியிட்டிருந்தபடி இவ் வகுப்புக்கான உணவு, தங்கல் ஏற்பாடுகள் அங்குள்ள ஓரிரு அருளாளர்களின் பொறுப்பில் நடைபெறாமல், கழகப் பொறுப்பிலேயே நடைபெறுவதால், உணவுச் செலவுக்கான ஏற்பாடுகள் குறித்து அன்பர்களும் அருங்கொடையாளர்களும் நன்கொடையாகப் பணமும், அரிசி, பருப்பு, உப்பு, புளி, எண்ணெய் முதலிய உணவுப் பொருள்களையும் தம் தம் ஆற்றலுக்கேற்ப முடிந்த அளவில் தந்துதவுமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள்.

3. பதிவுபெற்ற பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான உணவு ஏற்பாடுகளைக் கீழ்க்காணும் உணவுப் பொறுப்புக் குழு கவனிக்கும்.

சமையல் குழு :

பொறுப்பு : திரு. வையைநம்பி.
(அவருக்கு உதவியாக இருவர்)

மேலாளுமைக்குழு : திரு. அறிவுத் தொகையன்.
(ஞானசேகரன்)
திரு. நாராயணன்.
திரு. மாரி. இளநிலவழகன்.
திரு. குருநாதன்.

4. வகுப்புக்கு வரும் பயிற்சியாளர்கள் கவனிக்க:

1. தலைமையகத்துக்குப் பயிற்சித் தொகை விடுத்துப் பதிவு பெற்றவர்களுக்கான பதிவுப்பற்றுச் சீட்டுகளும் அடையாள அட்டைகளும் அணைப்பட்டியில், பயிற்சி வகுப்பு அமைப்பாளரால் நேரில் கொடுக்கப்பெறும்.

2. பயிற்சிக்கு வரும், கட்டணம் செலுத்திப் பதிவு பெற்ற மாணவர்கள் தவிர வேறு யாரும் வகுப்புக்குக் கண்டிப்பாக அனுமதிக்கப் பெறமாட்டார்கள்.

3. பார்வையாளர்களும் பயிற்சி வகுப்பு அமைப்பாளரின் இசைவுக்குப் பின்னரே, முன் குறிப்பிட்ட நாள் கட்டணத்துடன், வகுப்பு நடவடிக்கைகளைக் கவனிக்க, அனுமதிக்கப் பெறுவர். அவர்களுக்கும் அங்கு நடைபெறும் வேறு எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட இசைவில்லை.

4. பயிற்சிக்கு வரும் மாணவர்களும் ஆசிரியர்களும் தாங்கள் தங்கியிருப்பதற்கு உரிய படுக்கை, முதலிய பயன்படு பொருள்களுடன் உணவுக்காகத் தலைக்கு ஒரு தட்டும் குவளையும் கொண்டுவர அன்புடன் கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள். இவைகள் ஏற்பாட்டுக்கு ஏந்துகள் இல்லை.

5. அணைப்பட்டி, நிலக்கோட்டையிலிருந்து 7,8 கற்கள் தொலைவில், 20 நிமைய நகரஉந்துச் செலவில் உள்ள ஒரு சிற்றூர்.

மதுரைப் பகுதியிலிருந்து வருவோர்-, நிலக்கோட்டை. வழியாகச் செல்லும் எந்த வண்டியிலும் வரலாம்

சென்னை, திருச்சியிலிருந்து வருபவர்கள் திண்டுக்கல் வந்திறங்கி நிலக்கோட்டை வரவேண்டும்.

சேலம், கோவைப் பகுதியிலிருந்து வருவோர், பழனி வந்து, நிலக்கோட்டை வரவேண்டும்.

6. ஆசிரியர்கள் தாங்கள் கொடுத்த இசைவுப்படி அருள்கனிந்து, தங்கள் செலவில் வகுப்புக்கு வந்து சேரக் கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். ஓரளவு செலவுத்தொகை அவர்கள் ஊர் திரும்புகையில் வழங்கப்பெறும்.

7. இதுவரை பயிற்சி வகுப்புக்குப் பணம் அனுப்பத் தவறியவர்கள் 15-5-84 நாளைக்குள் அலுவலகத்திற்குப் பணவிடை வழியாக அனுப்பிப் பதிவு செய்து கொள்ளவும். அதிலும் தவறியவர்கள், நிலக்கோட்டை நகராட்சித் தங்கும் விடுதியில், வந்து தங்கவிருக்கும் பயிற்சிக் குழுப் பொறுப்பாளரிடம் நேரில் செலுத்தி அடையாள அட்டை பெற்றுக் கொள்ளலாம்.

8. மற்ற தேவையான விளக்கங்களும், பிற செயற்பாடுகளும் அணைப்பட்டியில் அறிவிக்கப்பெறும்.

9. மாணவர்களும், ஆசிரியர்களும், அங்கு வகுக்கப் பெறும் பயிற்சி வகுப்பு நடைமுறைகளுக்கும் நெறிமுறைகளுக்கும் மாறும் ஊறும் ஏற்படாமல் கடமையுணர்வுடனும் கட்டுப்பாட்டுணர்வுடனும், பொதுநலவுணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள்.

அன்புடன்

தென்னவன்கோ
துணைப்பொதுச் செயலர்

தென்மொழி. நா. இளமாறன்
பயிற்சி வகுப்பு அமைப்பாளர்.

மா. பொழிலன்
தொடர்பாளர், பொருளர்.



பாளையங்கோட்டை உ.த.மு.க. சிறப்பு நிகழ்ச்சி!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பாளையங்கோட்டை — கிளையின் சார்பில் பாளை — அங்காடி சவகர் திடலில் தி.பி. 2015, மீனம் 26, (8-4-1984) ஞாயிற்றுக்கிழமை மாலையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கென, உலகத்தமிழின முன்னேற்றக்கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் அன்று காலை நெல்லை வந்து சேர்ந்தார்கள். தென்மொழி அன்பர்கள், உ.த.மு.க. பொறுப்பாளர்கள் பலரும் நெல்லைச் சந்திப்புத் தொடர்வண்டி நிலையத்திற்கு வந்திருந்து கழக முதல்வரை வரவேற்றனர்.

அன்று இரவு 7 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் தொடங்கியது. நெல்லை (தெற்கு)மாவட்டத்தலைவர் புலவர் சிவசங்கு தலைமையேற்றார். கூட்டத்திற்கு வருகைதந்தோர் யாவரையும், கழகமுதல்வர் பாவலரேறு ஐயா அவர்களின் நீந்தமிழ்த் துன்பியல் பாவியம் "ஐயை"—வில்லிசை நிகழ்த்த வந்திருந்த தச்சநல்லூர் திருவாட்டி மு. செல்வத்தாயம்மாள் (திரவியத்தம்மாள்) — செந்தமிழ் வில்லிசைக் குழுவினரையும் வரவேற்று, உ.த.மு.க. துணைப் பொதுச்செயலர் திரு. தென்னவன்கோ உரையாற்றினார்.

தொடர்ந்து, நெல்லை (வடக்கு) மாவட்டச் செயலர் திரு. அ. தமிழன்பன், உ.த.மு.க. தலைமையக உதவியாளர் திரு. வியனரசு. உ. த. மு. க. தலைமையக முதன்மைக்குழு உறுப்பினர் தென்மொழி நா. இளமாறன், நெல்லை (தெற்கு) மாவட்டச் செயலர் திரு. இனநலவேந்தன், நெல்லை (வடக்கு) மாவட்டச் செயலர் அ. தமிழன்பன், நெல்லைத் தனித் தமிழ் இலக்கியக் கழகத் தலைவர் பேரா. வளனரசு நெல்லை மாவட்டப் பகுத்தறிவு ஆசிரியரணி, அம்மன் புரம் திரு. புலவர் தமிழ்மாறன், ஆகியோர் உணர்வு உரை கொளுத்தியபின்னர், உலகத்தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கொள்கை விளக்க நிறைவுப் பேருரை நிகழ்த்தினார்கள்.

இறுதியில், திரு. அதியமான் அவர்களால் வடித்தெடுக்கப்பெற்ற கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்களின் பைந்தமிழ்ப்பாவியம் "ஐயை" — வில்லிசை நிகழ்ச்சி, தச்சநல்லூர் திருவாட்டி மு. செல்வத்தாயம்மாள் — செந்தமிழ் வில்லிசைக் குழு"வினரால் நிகழ்த்தப் பெற்றது.

உ.த.மு.க. பாளைக்கிளையின் தலைவர் திரு. கோ. இராமன் நன்றி நவில இரவு ஒரு மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.

நிகழ்ச்சி இறுதியில் செந்தமிழ் வில்லிசைக் குழுவிற்கு நன்கொடை நல்கியோர் :

1. பாளை—தனித்தமிழ் இலக்கியக் கழகத் தலைவர் பேரா. வளனரசு — உரு. 51.00
2. பாளை—உ.த.மு.க. தலைவர் திரு. கோ. இராமன் — ,, 10.00
3. திருச்செந்தூர் வட்டம் அம்மன்புரம் பகுத்தறிவாளர் மன்றம் புலவர் தமிழ்மாறன் — ,, 10.00
4. ஆழ்வை—உ.த.மு.க. திரு. வியனரசு — ,, -10.00
5. பொன்னன் குறிச்சி உ.த.மு.க. தலைவர் திரு. செங்குன்றன் (அருணசலம்) — ,, 10.00

ஆழ்வார் திருநகரி உ.த.மு.க. அமைப்புக் கூட்டம் :

தி.பி. 2015 மீனம் 27, (9-4-1984) திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் ஆழ்வார் திருநகரி-பெரியார் திடலில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கிளைத் தொடக்க விழாவும் தந்தை பெரியார் படத்திறப்பு விழாவும். அண்மையில் ஐரோப்பிய நாடுகள் சென்று வந்த உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்குப் பாராட்டுவிழாவும் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன. இம் முப்பெரும் விழாவிற்கு ஓவியர் திரு. அருண்மொழியன் தலைமையேற்றார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய விழாவிற்கு வருகை தந்தோர் யாவரையும் ஆழ்வார் திருநகரி தி.க. அமைப்பாளர் திரு. சேதுராமசாமி வரவேற்று உரையாற்றினார்.

கழக முதல்வரைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தினார் குரும்பூர், உ.த.மு.க. தலைவர் திரு மலர்வேந்தன்.

தொடர்ந்து, ஆதித்த நல்லூர் தி.மு.க. தலைவர் திரு. சிதம்பரம், நெல்லை(தெற்கு)மாவட்டச் செயலர் திரு. இனநலவேந்தன், திரு. செம்பூர் சிவா, 'ஐயை' செந்தமிழ் வில்லிசை ஆசிரியர் திரு. அதியமான்,' உ.த.மு.க. தலைமையக உதவியாளர் திரு வியனரசு, உ. த. மு. க. துணைப் பொதுச் செயலர் திரு. தென்னவன்கோ, செந்தில்வட்டம் அம்மன்புரம், பகுத்தறிவு ஆசிரியரணி புலவர் திரு. தமிழ்மாறன் ஆகியோர் அரிய உணர்வுரையாற்றி அமைந்தனர்.

இறுதியில், உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள். மக்கள் உள்ளத்தில் தங்குமாறு உணர்வுப் பேருரை நிகழ்த்தித் தந்தை பெரியார் படத்தைத் திறந்து வைத்தார்கள். ஆழ்வை உ.த.மு.க. பொறுப்பாளர் நன்றி நவில இரவு ஒருமணியளவில் முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் நிறைவெய்தின.

பொன்னன்குறிச்சி - உ.த.மு.க. அமைப்புக்கூட்டம்

தி.பி. 2015, மீனம் 28 (10-4-84) செவ்வாய்க் கிழமை இரவு ஒன்பது மணியளவில் திருவைகுண்டம் வட்டம் பொன்னன்குறிச்சியில் உ.த.மு.க. கிளைத் தொடக்கவிழா நடைபெற்றது.

திருவை வட்டம் தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் திரு. செகவீர இராசேந்திரன் தலைமையேற்று உரையாற்றினார்.

உ.த.மு.க. நெல்லை (தெற்கு) மாவட்டச் செயலர் திரு. இனநலவேந்தன்,

உ.த.மு.க. தலைமையக உதவியாளர் திரு. வியனரசு, ஆதித்த நல்லூர் தி.மு.க. தலைவர் திரு சிதம்பரம், திரு. மலர்வேந்தன், பொன்னன் குறிச்சி உ.த.மு.க, தலைவர் திரு. செங்குன்றன் (அருணசலம்), உ.த.மு.க. துணைப்பொதுச்செயலர் திரு. தென்னவன்கோ, பகுத்தறிவு ஆசிரியரணி, அம்மன் புரம் திரு. புலவர் தமிழ்மாறன் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் உணர்வழுத்தம் மிகுந்து, எளிய மக்களின் உள்ளம் கொள்ளும் வகையில் எழுச்சியூட்டும் நிறைவுப் பேருரையாற்றினார்கள்.

திரு. வியனரசு நன்றி நவில அன்று இரவு ஒரு மணியளவில் உ.த.மு.க. கிளைத் தொடக்கவிழா நிறைவடைந்தது.

"முக்கொடைத் திட்ட' அமைப்பாய்வுக் கூட்டம் திருவைகுண்டம்

தி.பி. 2015, மீனம் 29 (11-4-84) வியாழக் கிழமை . பிற்பகல் திருவைகுண்டம் ஆய்வாளர் மாளிகையில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் தலைமையகம் அண்மையில் அறிவிக்கவிருக்கும் "முக்கொடைத் திட்ட" அமைப்பாய்வுக் கூட்டம் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில், துணைப்பொதுச் செயலர் தென்னவன்கோ முன்னிலையில் நடைபெற்றது.

அம்மன்புரம் புலவர் திரு. தமிழ்மாறன், திரு. ஞா. தோ. பன்னீர்ச்செல்வன், ஆதித்தநல்லூர் தி.மு.க. தலைவர் திரு சிதம்பரம்,

பொன்னன் குறிச்சி உ.த.மு.க. தலைவர் திரு. செங்குன்றன் (அருணசலம்), உ.த.மு.க. நெல்லை (தெற்கு) மாவட்டத் தலைவர் திரு. புலவர் சிவசங்கு, உ. த. மு. க' நெல்லை நெல்லை (தெற்கு) மாவட்டச் செயலர் திரு. இனநலவேந்தன், உ.த.மு.க. தலைமையக உதவியாளர் திரு. வியனரசு, செந்தமிழ் வில்லிசைக் குழு இயக்குநர் திரு. அதியமான், ஆழ்வார் திருநகரி உ.த.மு.க. தலைவர் திரு. ஓவியர் அருண்மொழியன், ஆகியோர் முக்கொடைத்திட்ட அமைப்பாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முக்கொடைத் திட்டத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டு தலைமையகம் அறிவிக்கும் ஒதுக்கப்பெறும் நன்கொடையை வழங்குவதெனத் தீர்மானம் நிறைவேறியது.

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம் பார்க்க)

அகம் கரியார்

— தமிழவேள் —

8. வியத்தகு பிறவி.

இராசாராம் மோகன்ராய் ஓர் ஆண் மகன்தான், என்றாலும் பெண்களின் பக்கம் நின்று பெண்களுக்காகப் போராடி, உடன்கட்டை ஏறுதல் என்னும் கொடிய பழக்கத்தை மாற்றவில்லையா?

ஆபிரகாம் இலிங்கன் ஒரு வெள்ளையர்தான் என்றாலும் கறுப்பர்கள் பக்கம் நின்று போராடிக் கறுப்பர்களுக்கு அடிமை நிலையிலிருந்து விடுதலை வாங்கித் தரவில்லையா?

அதுபோன்று தமிழுக்கும் தமிழினத்துக்கும் கேடு செய்கின்ற கூட்டம் என்று குறிப்பிடப்படும் கூட்டத்தில் பிறந்த சிலரேனும்-ஏன் தமிழன் பக்கமும் தமிழினத்தின் பக்கமும் நின்று போராடித் தமிழையும் தமிழினத்தையும் முன்னேற்றக் கூடாது?

இதுவரை அப்படி முன்வந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா?

பாரதியார் சில நேரங்களில் அப்படிப் போராடியவர் போல் தோன்றினார். தங்கள் இனத்தவரைக் கூடச் சாடினார் என்றாலும், வடமொழியை அவர் உயர்வாகவே எண்ணிவந்தார். தமிழினும் வடமொழியே உயர்ந்தது என்னும் எண்ணமுடையவர்கள் தமிழுக்கும் தமிழர்க்கும் துணை நிற்பது என்பது இயலாத செயல். ஏன் எனில் தமிழுக்குப் பகையாக இருப்பதே வடமொழிதான்!

தமிழுக்கே தம் நெஞ்சில் முதலிடம் தந்து வடமொழி வேண்டாம் என்று துணிந்து சொல்ல இதுவரை அந்தக் கூட்டத்தில் யாருக்கேனும் எண்ணம் வந்திருக்கிறதா என்று பார்த்தால் ஒரே ஒருவருக்குத்தான் வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்தான் வ.ரா. என்னும் எழுத்தாளர்.

அவர் ஒருவர்தாம் 1917-ஆம் ஆண்டிலேயே வட மொழிவேண்டாம் என்று எழுதினார்.

"வடமொழியில் திருமண விதிகள் அது பேசும் மொழியாக இருக்கும் அளவும் இருப்பது சரிதான். நாமோ தமிழ் பேசுகிறோம். இனி சமற்கிருதத்தில் இந்தச் சடங்குகள் நடக்க வேண்டியதில்லை. வடமொழி தெரியாத இதர சாதிகள் திருமணம் எந்த மொழியில் நடத்திக் கொள்கிறார்கள்? திருமணத்தின் நோக்கம் தடைப்பட்டுப் போகிறதா? அவர்கள் வீடு சுடுகாடோ? நல்ல மயக்கம் நம்முடைய மக்களுக்கு! அயல்நாட்டார் பழக்கம் மிகக்குறைவு நம் மக்களுக்கு, அதனாலேதான் கிணற்றுத் தவளையானார்கள்!"

அதே நேரத்தில் அவர் தமிழைப் பற்றியும் தமிழரைப் பற்றியும் எழுதியிருக்கும் வரிகளையும் காணுங்கள்!

"தமிழ்மொழியைக் கொண்டுதான் நாம் உயர முடியும்; ஒற்றுமையாக வாழமுடியும். அந்த ஒரு சாதனம்தான் நமக்கு மிஞ்சி இருக்கிறது. அதையும் கைவிட்டு விட்டுக் கையைவிரிக்க வேண்டாம். ஒருவர் மற்றவரைத் திட்டினாலும் நன்றாகத் தமிழில் திட்டுங்கள். 'டாம், ஆசு, டாங்கி' என்று திட்ட வேண்டாமே! என்னைபே முட்டாள் என்று தமிழில் திட்டுங்கள். ஆங்கிலத்தில் திட்டினால் வேகம் இருக்காது."

அவர் மறைந்தபோது திராவிடநாடு இதழில் அண்ணா அவர்கள் அவரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதி அந்தக்கட்டுரைக்கு ஒரு தலைப்பையும் கொடுத்தார். அந்தத்தலைப்பு "அக்கிரகாரத்து அதிசயப்பிறவி" என்பதாகும். அதற்கு முன் அந்தக் கூட்டத்தில அப்படிப்பட்டவர் பிறந்ததில்லை என்பது தானே அதன் கருத்து!

அந்த எழுத்தாளர் வ.ரா. வைப்போல் அவர்க்குப் பின் அந்த இனத்தில் யாரும் தோன்றியதாகத் தெரியவில்லை. இனிமேல்தான் தோன்றவேண்டும்.

அந்த இனத்தில் பிறக்க நேர்ந்தாலும் தாமும் தமிழர்களே! தங்கள் தாய்மொழி தமிழே! வடமொழி எந்த வகையிலும் தமிழினும் உயர்ந்தது அன்று! என்று முழுமனத்தோடு தமிழுக்கும் தமிழினத்துக்கும் தொண்டு செய்யப் பலர் முன்வர வேண்டும். அப்படி அவர்கள் வருகின்ற போதுதான் அவர்களும் தமிழினத்தைச் சேர்ந்தவர்களாக முடியும். அவர்களையும் உண்மைத்தமிழர்கள் என்று கொள்ள முடியும்.

அந்தநாள் வருகின்ற வரையில் அவர்களை "அகம் கரியார்" என்றுதான் குறிப்பிடவேண்டும். அத்தகையவர்களை நம்பி ஏமாறாமல் தமிழர்கள் விழிப்போடும் இருக்க வேண்டும்.

தமிழ்மொழியைத் தாழ்த்துகின்ற

(4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

உ.த.மு.க. பயிற்சி வகுப்பு-அமைப்பாய்வுக் குழுக் கூட்டம்-நிலக்கோட்டை

தி.பி. 2015, மேழம் 2, (14-4-1984) காரிக்கிழமை மாலை 6 மணியளவில் நிலக்கோட்டை வழிப்போக்கர் விடுதியில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கை உரவோர் பயிற்சி வகுப்பு அமைப்பாய்வுக் குழுக் கூட்டம் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில், துணைப் பொதுச் செயலர் தென்னவன்கோ முன்னிலையில், பயிற்சி வகுப்பு அமைப்பாளர் தென்மொழி நா. இளமாறன் அவர்களால் ஏற்பாடு செய்யப் பெற்றது.

பயிற்சி வகுப்பு நடைபெறுவதற்கான இடங்கள், பயிற்சியாளர்க்கான தங்குமனைகள், உணவு, பிற ஏந்துகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்யும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

நிலக்கோட்டை நன்கொடையாளர் குழு உறுப்பினர்கள் திரு. வையை நம்பி, நாராயணன், மாரி. நிலவழகன் (இராமச்சந்திரன்), மு.அ திருநாவுக்கரசு, அறிவுத் தொகையன், க சின்னச்சாமி, சி. முத்துச்சாமி ஆகியோர் ஆயிரம் உருவா தண்டுவதெனவும், பெரியகுளம் வட்ட உ.த மு.க. தலைவர் திரு. கல்லை. பொருஞ்சித்திரன் அரை மூட்டை அரிசி வழங்குவதெனவும், நெல்லை மாவட்ட உ.த.மு.க. இரண்டு மூட்டை அரிசி வழங்குவதெனவும், கல்லை அருட்செல்வன் அரைமூட்டை கம்புவழங்குவதெனவும் அமைப்பாளர் தென்மொழி நா. இளமாறன் வழியாக ஆயிரம் உருவாவும், உ.த.மு.க. தலைமைக் கழகம் ஆயிரம் உருவாவும் வழங்குவதெனவும் தீர்மானங்கள் நிறைவேறின.

அமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோர் :

1. கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் 2. திரு. தென்னவன்கோ, துணைப்பொதுச்செயலர் 3. திரு. வையை நம்பி 4. திரு. சி. முத்துசாமி 5. திரு. நாராயணன் 6 திரு அறிவுத் தொகையன் (ஞானசேகரன்)7. திரு. மாரி. நிலவழகன் (இராமச் சந்திரன்) 8. திரு.ப. வேலாயுதம் 9. திரு வேலவன், (பெரியகுளம் உ.த.மு.க. வட்டச் செயலர்.) 10. திரு. கல்லை-பெருஞ்சித்திரன், (பெரிய குளம் உ.த.மு.க. வட்டத் தலைவர்.) 11. திரு. இராமசாமி.12 திரு. திருநாவுக்கரசு, 13. திரு. தென்மொழி நா. இளமாறன் (பயிற்சி வகுப்பு அமைப்பாளர்)

பயிற்சி வகுப்பு - அமைப்புச் செலவிற்காக ஆண்டுத் தொடக்கத்தில் பயிற்சி வகுப்பு அமைப்பாளர் தென்மொழி நா. இளமாறன் கழக முதல்வரிடம் ஐநூறு உருவா வழங்கியுள்ளார். அவருக்குக் கழக முதல்வர் நன்றி தெரிவித்தார்.

— () —

வேடசெந்தூரில்

உயிர்நீத்த உழவர் நினைவு நாள் நிகழ்ச்சி. உ.த.மு.க. அறிமுக விழா.

மதுரை மாவட்டம் வேடசெந்தூரில் 9-4-78 அன்று உழவர் போராட்டத்தின் போது, காவலர்களால் சுடப்பட்டு உயிர் நீத்த ஈகச் செம்மல்களின் நினைவாக ஆண்டுதோறும் 'உழவர் நினைவு நாள்' கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதையொட்டி ஒரு கிழமை அளவில் 'மாட்டுத் தாவணி'யும் நடைபெற்று வருகின்றது.

இவ்வாண்டு ஆறுவது 'உழவர் நினைவு நாள்' வீரவணக்கத்துடன் கடைப்பிடிக்கப் பட்டது.

உயிர்நீத்த உழவர்களின் நினைவாக எழுப்பப் பெற்றுள்ள 'நினைவுத் தூண்' முன்னர் 9-4-84 திங்களன்று உழவர் பெருமக்கள் கூடி மலர்வளையங்களும் மாலைகளும் வைத்து வீரவணக்கம் செய்தனர். ஆடவர், பெண்டிர், சிறுவர் அனைவருமாக உழவர் குடும்பங்கள் திரண்டு நின்ற காட்சி "வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் கூட்டம்" என்ற பாவேந்தரின் வீரவரிகளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தது.

தொடர்ந்து பிற நாட்களில், உழவர் பெருமக்கள் தம் நிலைகளைப் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றினர். 11-4-84 அறிவன் கிழமையன்று 'தமிழக உழவர்கள் முன்னேற்றச் சங்கம்' என்ற அமைப்பின் சார்பில், 'உ.த மு.க. அறிமுக விழா" நடத்தப்பெற்றது. இந்நாள் உலகத் தமிழர்களுக்கெனக் காலத்தின் தேவையாகக் கனிந்துள்ள உ.த.மு க. இயக்கத்தை உழவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பது இந்நிகழ்ச்சியின் நோக்கமாய் அமைந்தது.

இந்நிகழ்ச்சிக்குத் தமிழக உழவர்கள் (விவசாயிகள்) முன்னேற்றக் கழகக் கிளையின் தலைவர் திரு.வா சுப்பிரமணியம் தலைமையேற்றார்.

திரு கல்லை. அருட்செல்வன் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடினார். திரு. நல். இளஞ்செழியன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பேராசிரியர். காளிமுத்து க.மு, அவர்கள், திரு தமிழ்மகன் திரு. தமிழச்சுடர் மணிமுத்து, திரு. ஒடுவை ந. தமிழ்வேந்தன், திரு. பாவலர். மு. பழனிச்சாமி, திரு. கல்லை அருட்செல்வன் ஆகியோர் உ.த.மு க. இயக்கத்தை அறிமுகம் செய்து கொள்கைகளை விளக்கிச் சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து 'தமிழ்ச்சுடர்' மணிமுத்து அவர்களை நடுவராகக் கொண்டு 'வழக்காடு மன்றம்' நிகழ்ந்தது.

"இலங்கைத் தமிழர்களின் இன்னல்களுக்குச் சிங்கள வெறியர்களை விட, தமிழர்களும் தமிழினத் தலைவர்களுமே குற்றவாளிகள்" என்ற பொருளில் திருவாளர்கள்: புலவர். வீரகலாநிதியும் சிலைடைப் புலவர் சிக்கந்தரும் வழக்காடினர்.

திரு. ந. திருமலைசாமி அவர்கள் நன்றி கூறினார். குஞ்சப்பன்பட்டி திரு. இரா. கந்தசாமி அவர்களின் பெருமுயற்சி மிகவும் பாராட்டிற்குரியது.

செய்தி : வணங்காமுடி.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் வீரப்பனார் சாவகம்-பாலித்தீவகம்-சுற்றுலா

நமது 'தமிழ்நிலம்' உறுப்பாசிரியரும், உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத் தலைவரும் மலேசியத் தமிழ் இலக்கியக் கழகப் பொதுச்செயலாளருமான திரு. இரா ந. வீரப்பன் அவர்கள், இருகிழமை உலாவாக, சிங்கப்பூரிலிருந்து 7-4-84-இல் மாலையில் கருடவானூர்தியில் சாவகத் தலைநகர் சாக்கர்த்தா செல்கிறார்.

தெற்கே ஐநூறு கல்தொலைவிலுள்ள சாவாத் தீவுக்கும், அதன் கிழக்கிலுள்ள பாலித்தீவுக்கும், உள்நாட்டில் ஐநூறு கல்தொலைவான பல பழம்பெரும் பேரூர்களில அவர் சுற்றுலா நிகழ்த்திக் கண்டு, கேட்டுத் திரும்புவார். பதினையாயிரம் தமிழர்கள் மட்டுமே தீவகத்தில் பரந்து வாழும் தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளையும், 6ஆம்-12ஆம் நூற்றாண்டுகளில், மற்றும் சில நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட இந்து-புத்தக கோயில்களையும், கலைஎச்சங்களையும் கண்டறிவார். பல்லவ, சிரிவிசய, சோழப் பேரரசுகளின் பழந்தமிழ் ஆட்சியின் மாட்சிகளையும் அறிவது அவருடைய இவ்வுலாவின் குறிக்கோள். கடந்த நூற்றாண்டில் டச்சுக் குடியேற்றத்தால் அங்கு வாழ்ந்துவரும் தமிழர் வாழ்வில் தமிழ்மொழியின் சிதைவு-சீர்கேடுகளை அறிந்து வந்து நூல் எழுதுவார். இப்பகுதிக்கு இதுவே இவரின் முதல்-உலா. இந்தோனேசியா என்ற மூவாயிரம் தீவுகளில் மிகப் பெரிய தீவான சுமத்திரா என்ற (மலாயாவுக்கு மேற்கிலுள்ளது) தீவுக்கு, இவர் 1981இல் சென்று, அங்கு வாழும் முப்பதாயிரம் தமிழர்களின் தலைவர்களையும், தமிழர் கோவில்களையும் கண்டுவந்திருக்கிறார் தமிழகத் தொடர்பற்றுவிட்ட இப்பகுதிகள், கடைக்கழகக் காலம்முதல், தமிழக வரலாற்றுத் தொடர்புள்ள ஒரே நாடு இது. இரண்டாயிரமாண்டுகளாகத் தமிழக-சாவக அரசியல், வணிகம், கலை, பண்பாட்டுத் தொடர்புறவுகள் மிக மிக நெருக்கமாக இருந்த ஒரே நாடும் இதுதான். சாவத் தீவுகளை மற்றொரு இந்தியா என்றும், இந்தியாவின் உடன் பிறப்பகம் என்றும் புலவர்களாலும், வரலாற்றாசிரியர்களாலும் சொல்லப்பட்ட இந்நாடு ஆயிரமாண்டாகத் தமிழர் தொடர்பு இழந்தது. மணப் பொருட்களை மிக அதிகமாகப் பயிரிட்டு மணக்கும்நாடு இது.

'முந்நீர் பழந்தீவு பன்னிராயிரம்' என்று தென்கிழக்கிந்தியத் தீவுகளான பன்னிரண்டாயிரம் (பல்லவன் தீவு மற்றும் பிலிப்பைன் தீவுகளும், பிறவும்) தீவகங்கள் இப்பகுதியில் உள்ளன.

10-12ஆம் நூற்றாண்டுகளில் கடற்படைப்பேரரசான சோழப்பேரரசின் இராசராசன், இராசேந்திரன் கல்வெட்டுகளும், சாசனங்களும், அவர்களின் வெற்றியைக் கூறுகின்றன. பல தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. மணிமேகலையில் சிறப்பான சான்றுகள் உள்ளன. தமிழக சிற்பக் கல்வெட்டுகள் சாவாவின் போராபுதூர், பிரம்பனூர், போகூர், சிந்தாமணி போன்ற பழம்பேரூர்களில் காணலாம்- இவற்றைக் கண்டறிவார்.

இந்தோனேசியாவின் 12 கோடிமக்களில் இரண்டு கோடிப்பேர் இந்துக்கள். இவர்களில் பெரும்பகுதி பாலித்தீவில் உள்ளனர். ஒருகாலத்தில் காவி மொழியானது இன்று சாவி (Jawi) மொழியாகி விட்டது. இந்த மொழியும் சாவானிய மொழியும் பேசுகிறவர்கள் அதிகம். பேச்சமொழிகள் நூற்றுக் கணக்கில் பேசப்படுகின்றன. ஆனல் நாட்டு-அரசியல் மொழி மலாய்தான். இந்த மலாய்மொழியில் ஆயிரக் கணக்கான தமிழ்ச்சொற்கள் சேருன்றி மலாய் மொழியாகப் பிறந்த இடம், அந்த காலத்தில் மலையூர் என்றும் இன்று (ஜம்பி) சம்பியாகவும் உள்ள இடம் பலம்பாங்கில் உண்டு. அகத்தியர், போகர் போன்ற முனிவர்கள் இங்கு வருகைதந்துள்ளதும், காஞ்சிபுரம் என்ற ஊரும், பெரும்பகுதி ஊர்ப்பெயர்கள் தமிழாகவும்-வடமொழியாகவும் இருப்பதும் இங்குள்ள பெருஞ்சிறப்பு.

இவர், தம்முடன் மலாய்மொழியாக்கப்பட்ட தமிழ் நூல்களான, திருக்குறள், பாஞ்சாலிசபதம், சத்தியசோதனை ஆகியவற்றைக் கொண்டு செல்கிறார். சாய்கால் மிக்கத் தமிழ்ப் பெரியார் சிலரின் ஆதரவுடன், உ த.ப.இ இந்தோனியக் கிளையும், பாரிசாத இந்து தரும இயக்கமும் அதன் தலைவரான திரு மு. இராமுலுவும், திரு எம். வேலு. திரு மா. சீனிவாசன், திரு மோகன், வழக்கறிஞர் சிதம்பரம் ஆகியோரும் தலைவரின் உள்நாட்டு உலாவுக்கு ஏற்பாடு செய்து தருகிறார்கள். பெரும்வணிகர்களாக உள்ள ஒருசில தமிழர்களும், தமிழ்முசுலிம்களும் அதற்கு உறுதுணை செய்வதாகத்தெரிகிறது.

சூரபாயா, மதுரா, பண்டுங். தென்பசார், சோக்சாக்கர்தா, சமாராங் போன்ற நகரங்களுக்கும் இவரது உலா விரிவடையும். 14நாள்களில் இவர் சென்று திரும்புவார் என்றும், 'உலாஉரை' தமிழ்நிலத்தில் வரும் எனவும் தமிழ்நிலப் பேராளர் எழுதுகிறார்.

வேண்டுகைப் படிவங்களில் சாதி என்ன என்று கேட்கப்படுகிறதே!

யாருக்கு என்ன தண்டனை கொடுப்பது?

— பழங்கரை நா. தமிழவேள்.

சாதிப்பெயரைச் சொல்லி இழிவாகத் திட்டியதாகக் கூறப்படும் வழக்கில் திருநெல்வேலி ஆழ்வார் திருநகரி காவல்துறை துணை ஆய்வாளர், திரு. நீலகண்டன் என்பவருக்கு மாந்த உரிமைச்சட்டத்தின்படி ஆறுகிழமைகள் சிறைத் தண்டனையும் உருபா 300 தண்டத் தொகையும் இடப்பட்டது. தண்டத் தொகையைச் செலுத்தத் தவறினால், மேலும் மூன்று கிழமைகள் சிறைத் தண்டனை ஏற்க வேண்டும் என்று அறமன்றத் தீர்ப்புக் கூறுகிறது. (22-2-84 தினமணி செய்தி.)

ஆனால் பள்ளி, கல்லூரிகளில் மாணவ மாணவியர்களைச் சேர்க்கும் போதும, அரசு அலுவலகங்களில் வேலை வேண்டி வேண்டுகை தரும் போதும், என்ன சாதி என்று அப்படிவங்களில் கேட்கப்படுகிறதே! மேலும் நலிந்த பிரிவினருக்குச் சலுகைகள் வழங்குவதில் சாதி அடிப்படையில் வழங்கப்படுகிறதே! இன்னும் சொன்னால் சாதிக்கொரு கட்சி, சாதிக்கொரு கழகம (சங்கம்) தெருவுக்கொரு சாதிப்பெயர் வைக்கப்பட்டுள்ளதே! இவையெல்லாம் இழிவாகத் தோன்றவில்லையா? சாதி மதச் சார்பற்ற அரசாயிற்றே! இவற்றுக்கெல்லாம் யாருக்கு, என்ன, தண்டனை கொடுப்பது? சாதி மதச்சார்பற்ற மாநில, நடுவண் அரசுகள் கவனிக்குமா? 0

வரலாறெல்லாம் தவிடு பொடி யாக்கிடுக!

அரசின் பழம்பொருள், பண்பாடு பாதுகாப்புத் துறையின் பார்வைக்கு!

கொற்கையும் தமிழும் குன்றென நிமிர்க!

கொற்கைத் தமிழ் மன்றம், ஏரல்.

தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோள்!

வடவேங்கடம் தென்குமரி ஆயிடை அமைந்த தண்டமிழ் நாட்டுச் செந்தமிழ் நிலவும் பாண்டிய நாட்டின் ஒல்காப் புகழ் கொற்கையம் பெருந்துறை கழகக் காலந்தொட்டே பாண்டிய நாட்டிற்குக் கோநகரமாகவும் துறைமுகப்பட்டினமாகவும் விளங்கியது என்பதைப் பல சான்றுகளால் நாம் அறியலாம்.

கொற்கையின் பழம் பெருமைகள் :—

(1) மாந்தன் தோன்றிய தொன்முது காலத்தில் குமரிக்கண்டத்திலுள்ள தென்மதுரையில் பாண்டியர் அரசாண்டனர். முதல் கழகத்தைத் தோற்றுவித்துத் தமிழை வளர்த்தனர்.

(2) இன்றைய கன்னியாகுமரிக்குத் தெற்கே முன்பு பெரு நிலமாக விளங்கிய குமரிக்கண்டம் அழிந்தவுடன் கொற்கையைத் தலைநகராகக் கொண்டு பாண்டியர் செங்கோலோச்சி இரண்டாம் கழகத்தை ஏற்படுத்தித் தமிழை வளர்த்தனர்.

(3) அகநானூறு (130) நற்றிணை, மதுரைக் காஞ்சி சிறுபாணாற்றுப்படை, முத்தொள்ளாயிரம் வான்மீகி இராமாயணம் முதலிய இலக்கியங்களிலும் பிளினி, தாலமி, மார்க்கபோலோ, வாசுப் முதலிய மேனாட்டாரின் வரலாற்று நூலிலும் கொற்கை பற்றிய விரிந்த செய்திகள் உள்ளன.

(4) கி.பி 1881-இல் கால்டுவெல் அவர்கள், கி. பி. 1883-இல் உலோவந்தால் அவர்கள், கி. பி. 1973-இல் நம் தொல்பொருள் ஆய்வாளர்கள் இவர்களால் கொற்கை தோண்டிப் புதைபொருள்கள் எடுக்கப்பட்டன. கி.மு. மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகன் காலத் தடயங்களொடு கொற்கையில் கிடைத்த பழம்பொருள்கள் ஒப்பிடப்பட்டு ஒத்துள்ளன எனத் தொல்பொருள்துறை இயக்குநர் திரு. நாகராசன் குறிப்பிட்டுள்ளார்கள். இற்றை நாள் ஏரலுக்குக் கிழக்கே மூன்று கல் தொலைவில் தன் பழஞ் சிறப்பு இழந்து சிற்றூராய் உள்ளது.

5) கொற்கையைச் சுற்றியுள்ள சிறப்புக் காரணிகள் : —

நாணயம் அச்சடித்த அக்கசாலை, தானமாகக் கொடுத்த மாறன்மங்கலம், நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர் வாழ்ந்த மாறோக்கம், கி. பி. 1300-இல் மார்க்கபோலோ வந்திறங்கிய காயல், கி. பி. 700-இல் கொற்கையில் கட்டப்பெற்ற ஈசுவரமுடையார் என்ற பிள்ளையார் கோவில், பொருநைக் கடற் சங்குமுகத்தில் சங்குமுக ஈசுவரர் கோவில், செழியன் நங்கை மருவிச் செழுங்கை எனப்படும் வெற்றிவேல் அம்மன் கோவில் இடையர்க்கு வரியின்றிக் கொடுத்த இடையர்காடு, காவலர்க்கு வரியின்றி வழங்கிய காவற்காடு, கோவன்காடு, உமரிச் செடி (முள்)வளர்ந்த உமரிக்காடு. குற்றம் புரிந்தவர்களைத் தூக்கிலிட்ட கழுவன் திரடு உள்ள வாழவல்லான்—காயல், மெய்க்காப்பாளராய் விளங்கிய ஏமராசன் கோவில், ஊர்க்காவல் தெய்வமான ஊர்காத்தபெருமாள் கோவில், கோட்டையைக் காவல் புரிந்த கோட்டாளமுத்துக் கோவில், அறிவர் உறைவிடமான அறிவன்புரம், கோட்டையும் காடும் இருந்த கோட்டைக்காடு, சிறுபடை வைத்திருந்த சிறுதண்டுநல்லூர் பெரும்படை வைத்திருந்த பெருப்படையான் கோவில், வில்வீரர் உறைந்த கொட்டாரக்குறிச்சி, கிளிஞ்சில் எடுத்த எழில்மிகு ஏரல், சேனாவரையர் வாழ்ந்த ஆற்றூர், கருங்குள வாதனார் வாழ்ந்த கருங்குளம், பானம் பாரனார் வாழ்ந்த பன்னம்பாறை, அரசர் குளிக்கும் அரசன்குளம், அரசிளங் கன்னியர் குளிக்கும் கன்னியர்குட்டம், நம்மாழ்வார் வாழ்ந்த ஆழ்வார் திருநகரி, பல்லாயிரம் மக்கள் கூடும் சுடலைமாடன் கோவில்.

(6) இவ்வூர்களும், கோவில்களும் கொற்கையைச் சுற்றி இருப்பன. இச்சிற்றூராகிய கொற்கையே பழங்காலக் கொற்கை. காலவெள்ளத்தால் அழிந்து போயிற்று என நமக்கு அறிவுறுத்துகின்றது.

(7) "கண்ணகி வழக்கால் நெடுஞ்செழியன் உயிர் நீங்கியபின், கொற்கையில் இருந்த அவன் தம்பி வெற்றிவேல் செழியன் அரசுகட்டில் ஏறினான்" என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

(8) ஆதித்தநல்லூர் பறம்பில் அரசமரபினரை முதுமக்கள் தாழியில் வைத்துப் புதைத்தனர்.

இன்று இருக்கும் நிலையில் கொற்கை : —

1. சிறந்த குளம் 2. சமணதீர்த்தங்கரர் சிலை 3. எழில்மிகு சோலைகள் 4. வெற்றிவேல் அம்மன் கோவில் 5 ஈசுவரமுடையார் கோவில் 6. ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முன்பு உள்ள வன்னிமரம் 7. அரசின் தொல்பொருள் சேர்ப்புக்கு ஓர் அலுவலகம் இவையே இன்றுள்ளன.

இனி கொற்கையை மேலோங்கச் செய்ய வேண்டுவன :

1) குளத்தை ஆழப்படுத்தி ஓடம் விடுதல்.

2) வெற்றிவேல் அம்மன் கோவிலைச் செப்பனிடல். (இதுதான் வெற்றிவேற்செழியன் கட்டிய கண்ணகி கோவில்).

3) முந்தைய நாளில் அராபியர், உரோமானியர், கிரேக்கர் முதலியோர் குதிரை, பொன் கொணர்ந்து முத்து, இஞ்சி, ஏலம், இலவங்கம், மயில்பீலி, அரிசி, சந்தனம் ஏற்றிச் சென்றது போன்ற காட்சிச் சிலைகள் அமைத்தல்.

4) பாண்டியன் தன் கையையே வெட்டிக் கொண்டு பொற்கை மாட்டிக்கொண்ட சிலை.

5) வெளிநாட்டார் வந்து முத்து வாணிகம் செய்வது போன்ற சிலைகள்.

6) கண்ணகி வழக்காடி வென்றதும், நெடுஞ்செழியன் உயிர் நீங்கியதும், தம்பி வெற்றிவேல் செழியன் மதுரை சென்று அரசு கட்டில் ஏறியதும் ஆன சிலைகள்.

7) பாண்டியர் திருவோலக்கத்தில் வீற்றிருந்து அரசோச்சிப் புலவர், பொருநர்க்குப் பொற்பூ அணிந்து பொன் வழங்கும் காட்சிச் சாலை.

8) குமரி அழிந்ததும் தொல்காப்பியம் முதலிய பழம்பெரும் நூல்களை வாரிக் கொணரும் பாண்டிய அரசன் சிலை.

9) குமரிக் கண்டத் தோற்றம் முதல் அமைந்த தமிழ் நாட்டு வரலாற்றுக் கலைக்கூடம் அமைத்தல்.

10) நெல்லைமாவட்டத்திலுள்ள ஆதித்தநல்லூர் கொற்கை மற்றும் வரலாற்றுச் சிறப்புகளையுடைய நகர்களில் கிடைத்த பழம் பொருட்களைத் தொகுத்து அரும்பொருட் காட்சியகம் அமைத்தல்.

தமிழக அரசுக்கு வேண்டுகோள்!

மேலே கூறப்பட்ட இவைபோன்ற பிறவாறும் தமிழ் அறிஞர்களைக் கொணர்ந்து ஆய்ந்து வேண்டுவன செய்து சுற்றுலா நகரமாகக் கொற்கை ஆவதற்குத் தகுதி உடையது என்பது இதனால் விளங்கும் என நம்புகிறோம்.

வளர்ந்துவரும் தொழில் நகரமும், துறைமுகப் பட்டினமுமான தூத்துக்குடிக்கும், ஆண்டுக்குப் பல முறை திருவிழாக்கள் நடைபெறும் திருச்செந்தூருக்கும் இடையே கடற்கரை நெடுஞ்சாலையில் அமைந்திருக்கும் பழையகாயலுக்கு மேற்கே மூன்று கல் தொலைவிலுள்ள கொற்கையைச் சுற்றுலா இடமாகத் தேர்ந்தெடுத்து மேம்பாடு செய்தால், வெளிநாட்டினரையும் நம் நாட்டினரையும் கவர்ந்து நமக்கு வெளிநாட்டுச் செலவகம் கிடைக்கும். எனவே, தமிழக அரசு, கொற்கையைச் சுற்றுலா இடமாக ஆக்குமாறு சுற்றுவட்டாரப் பொதுமக்கள் சார்பாகக் கொற்கைத் தமிழ் மன்றம் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றது. அரசுக்குப் பன்முறை இவ்வேண்டுகோளைத் தெரிவித்துள்ளோம்.

வாழ்க தமிழ்! வளர்க கொற்கையின் புகழ்!!

இன்னணம், புலவர். ச. சிவசங்கு தலைவர்
புலவர். க. த்துரை க.நி.,கல்.இ செயலர்

—3-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆனாலும், திரு. சுப்பு அவர்களின் அறிக்கையும் அவர் வெளியேற்றமும், கலைஞரின் செயற்பாடுகளைக் குறித்து மிகுதியும் கவலைப்படச்செய்து விட்டன.

எனவே, கலைஞருக்காக நாம் உண்மையாகவே கவலைப்படுகிறோம்; இரக்கப்படுகிறோம்! அவர்தம் செயற்பாடுகள் சரிதாமா என்பதை அவர் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம். அவருடன் இருந்து ஒத்துழைக்கும் தலைவர்களுக்கும் அவருக்கு ஆதரவளிப்பதாகக் கூறிக்கொள்ளும் தந்நலக்காரர்களுக்கும் நாம் அன்புடன் கூறிக் கொள்வது இது : ! நீங்கள் மட்டுமே தமிழினத்துக்கு முழுநலமும் செய்துவிடமுடியும் என்று கருதி விடாதீர்கள். அந்த மனக்களிப்பிலும் எண்ணச் செருக்கிலும், சுப்பு போலும் தூய்மையான செயல் தொண்டர்களை மூடி மறைத்துவிட முயலாதீர்கள். உங்கள் அரசியல் சூழ்ச்சிகளை அறிஞர்களிடமே காட்ட வேண்டாம். அந்தப்பழி உங்களை வாழவைக்காது; உங்களை ஈடேறவும் விடாது. தமிழ்மொழிக்கும், இனத்துக்கும் நாட்டுக்கும் உண்மைத் தொண்டாற்றும் எவருக்கும் நீங்கள் ஆதரவும் அன்பும் காட்டுங்கள். அதுவே நீங்கள் அவற்றுக்குச் செய்யும் தலையாய தொண்டாக இருக்கட்டும்! O

கொற்கைத் தமிழ் மன்றம், ஏரல்.

ஒரு வேண்டுகையும் அறிவிப்பும்!

தமிழக அரசு தூத்துக்குடியைச் சிதம்பரனார் மாவட்டம் என்று பெயரமைக்க ஆவன செய்வதாய் அறிகிறோம்; எல்லாப் பழம் பெருமையும் வாய்ந்த 'கொற்கையை' கொற்கை வட்டம் என்றுவது அமைக்குமாறு மிகவும் விருப்போடு இப் பகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம். இஃது ஏற்கனவே அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்ப் படிக்க விரும்பும் அன்பர்கட்கு!

(பி. லிட்), புலவர், முதுகலை முதலியன படிக்க வேண்டின் இலவயமாகக் கற்பிக்கப்படும். க. ஐயாத்துரை க.நி.கல்.இ. புலவர், பொன்னம்பலம், புலவர் ச. சிவசங்கு இதற்கு ஆசிரியர்களாக அமர்த்தப் பெற்றுள்ளனர் இதற்குக் கொற்கைத் தமிழ்மன்றச் செயலரை அணுகவும்.

நம் பார்வைக்கு வருகின்ற இதழ்கள்!

21) எழுகதிர் — ஆண்டொப்பம் 15 உருபா — அரு கோபாலன், 4/77 சுபேதார் தோட்டம், சென்னை-94

22) ஆசிரியர் குரல் — ஆண்டுக் கட்டணம் உரு 10 — இரா. நாராயணசாமி, 38 அண்ணா தெரு, அவநாசி-638654

23) தாய் — உருபா 1-20 — வலம்புரிசான், 31 நெல்சன்மாணிக்கம்சாலை, சென்னை-29

24) மெட்டி — உருபா 1-50 — வலம்புரிசான், நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை-29

25) பொன்னகரம் — உருபா-1 — எம் சுல்தான், அ 1 பாரதிநகர், சென்னை-21

26) சுட்டி — 50 காசு — ஆசிரியர் குழு, 1494 அண்ணாநகர், சென்னை-40

27) தையல் கலைஞன் — உருபா 1-50 — டி.வி.எசு, மணி, மைலாப்பூர்-சென்னை-4

28) சுயம் வரம் — உருபா 1-25 — தேகியூர் எசு.வி.சாத்திரி, 11 தொடர் வண்டி நிலையச் சாலை சென்னை-33

29) சுபம் — 35 காசு — குன்றில்குமார், இருக்கன்துறை - 27106

(தொடரும்)

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS(C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு.
திருவல்லிக்கேணி,
சென்னை — 5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும் பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.